புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தீண்டாச் சேரி

**முனைவர் அய். அம்பேத்கார்**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,*
*அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி,*
*வடசென்னிமலை, ஆத்தூர். 636 121.*

*'தீண்டாச் சேரி' என்ற சொல் எழுத்துப் பதிவுகளில் இடம்பெற்ற காலம் 11ஆம் நூற்றாண்டு எனலாம். அதாவது இராஜராஜ சோழனின்(கி.பி 985-1014) இறுதி ஆட்சியாண்டான இருபத்தொன்பதாம் ஆண்டில், அவனால் கற்றளியாக மாற்றப்பட்ட இராஜராஜேஷ்வர்க்கு சோழ மண்டலத்தின் ஆட்சிக்குட்பட்ட 40 ஊர்களில் இருந்துவரும் வருமானத்தை அக்கோவிலுக்கு நல்கியதைக் குறிப்பிடும்போது இரண்டு இடங்களில் 'தீண்டாச்சேரி' என்ற சொல் இடம்பெறுகின்றது. மற்றொரு குறிப்பு பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள பாகூரில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாம் ரஜேந்திரன் ஆட்சியில் (கி.பி 1028) பொறிக்கப்பட்ட கல்வெட்டில் ஒரு இடத்தில் உள்ளது. இதற்கு முன்பாக இலக்கியங்களில் 'தீண்டா'(நற்-21,புறம்-246) 'தீண்டார்'(ஆசாரக்கோவை-பா.எண்5.) என்ற சொற்கள் இடம்பெற்றுள்ளன. 'தீண்டாச்சேரி' என்ற சொல் இடம்பெறவில்லை. இக்கல்வெட்டுகளில் குறிப்பிடப்படும் 'தீண்டாச்சேரி' என்ன பொருண்மையில் கையாளப்பட்டிருக்கின்றன அல்லது எச்சமூகத்தாரைக் குறித்துப் பதிவு செய்யப்பட்டுள்ளன என ஆராயலாம்.*

*'தீண்டாச் சேரி' என்ற சொல்லை தீண்டா + சேரி என இரண்டாகப் பிரிக்கலாம். இதில் 'சேரி' என்ற உடன் இன்றைய நம் பொதுமன புத்தியில் தீண்டத்தகாதவர்கள் வாழுமிடம் என்ற எண்ணம் வருவதைத் தவிர்க்க முடியவில்லை. ஆனால் அச்சொல்லுக்கான பொருளை மேற்காணுமாறு எடுத்துக்கொள்வதில் சிக்கல் இருக்கின்றது. ஏனெனில் முந்தைய காலங்களில் சேரி என்பது இன்றைய தீண்டத்தகாதவர்கள் மட்டும் சேர்ந்து வாழ்ந்த பகுதியைக் குறிக்கவில்லை. மாறாகப் பார்ப்பனச்சேரி, வேள்ளாளச்சேரி, கம்மாளச்சேரி, ஈழவச்சேரி,தளிச்சேரி என்று பிற சமூகத்தினர் ஒன்றாகச் சேர்ந்து வாழும் பகுதியையும் குறித்து வந்துள்ளது. அதனால் சேரி என்ற சொல் இன்றைய பொருண்மையில் எல்லாக் காலத்திலும் கையாளப்படவில்லை அல்லது அச்சொல்லுக்கு உரிமையுடையவராக இன்றைய பட்டியலினத்தவர்களை மட்டும் குறிப்பிட முடியாத சூழல் உள்ளது. அதனால் சேரி என்ற சொல் இன்றைய நிலையில் பட்டியலினத்தவர்களைக் குறித்தாலும் அதற்கான பொருளைப் பொதுவானதாக அல்லது எல்லா சமூகத்தினருக்கும்மானதாகக் குறிப்பதில் எந்த நெருடலும் இல்லை .*

*'தீண்டா' என்ற சொல் 'சேரி' என்ற சொல்லைப் போன்ற நெருக்கடியைத் தரவில்லை. ஏனெனில் நம் வாழ்க்கை முறை என்பது சங்க காலம் முதல் இன்றைய கிராம அமைப்புமுறைவரை குழு குழுவாக, இனம் இனமாகப் பிரிந்தே வாழ்ந்து வந்திருக்கின்றனர் வருகின்றனர். (நகர்புறமும்,இன்றைய புதிய மனைப்பிரிவு குடியேற்றங்களும் இதற்கு மாறாக உள்ளன.). அதாவது தீண்டாமையைக் கடைப்பிடிக்காவிட்டாலும் எல்லா சமூகமும் எப்பொழுதும் இணைந்து அல்லது கலந்து (ஒரு சாதியார் வாழும் பகுதியில் மற்றொரு சாதியாரின் குடியிருப்பு இருப்பதில்லை. இது தலித் அல்லாத பிறருக்கும் பொருந்தும்) வாழவில்லை. ஊருக்குள் இருந்தாலும் தனித் தனி தெருவில்தான் வசித்தனர். அதனால் 'தீண்டா' என்ற சொல்லை*

இன்றைய பட்டியலினத்தவர்களோடு பொருத்திப் பொருள் கொள்வதில் எந்த மனநெருக்கடியும் ஏற்படுவதில்லை.

இங்கே ‘தீண்டத்தகாதவர்கள்’ என்று குறிப்பிடப்படும் சாதிகளில் ஒன்றான ‘பறையர்’ பற்றி தென்னிந்திய குலங்களும் குடிகளும் நூலில் எட்கர் தர்ஸ்டன் கூறும் செய்தியை இணைத்துப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும் ‘பறையரும் பிராமணரும் ஒருவரையொருவர் எவ்வாறு வெறுத்து வருகின்றனர் என்பதனை ஆராயும்போதும் இந்தக் கருத்தைத் தெளியலாம். பறையன் ஒருவன் தன்னைத் தொடுவதாலும் தன் முன் வருவதாலும் அவன் நிழல் தன்னைத் தொடுவதாலும் தன் முன் வருவதாலும் அவன் நிழல் தன் மேல் விழுவதாலும் தான் தீட்டுக்கு உள்ளாவதாகக் கருதும் ஒரு பிராமணன் அவனைத் தன் வீட்டிலும் தான் குடியிருப்பது ஓர் அக்ரகாரமாயின் தன் தெருவிலும் நுழைய அனுமதிக்கமாட்டான் என்பது அனைவரும் நன்கு அறிந்த ஒன்றே. பறையரும் பிராமணன் தங்கள் சேரியில் நுழைய அனுமதிப்பதில்லை என்பது பலாராலும் அறியப்படாத ஓர் உண்மையாகும். பறையர் சேரியினுள் செல்ல ஒரு பிராமணன் முற்படுவானாயின் அவன் தலையில் சாணி கரைத்த நீரைக் கொட்டி அவனை அங்கிருந்து துரத்துவர். ‘மைசூரில் உள்ள பிராமணர்கள் ஹொலையர்(கருநாடகப் பறையர்) சேரிக்குள்ளாகப் புகுந்து தீங்கின்றி வெளியே வந்தால் அது தங்களுக்கு மிகுந்த அதிஷ்டத்துக்கு உள்ளாக வாய்ப்பினை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையினை உடையவர்களாக உள்ளனர். அவ்வாறு ஹொலையர் சேரியில் நுழை முற்படும் பிராமணனை முன்னாளில் ஹொலையர் அனைவரும் கூடிச் செறுப்பால் அடித்து உயிர் துறக்கும்படி கூடச் செய்துள்ளனர்’ என காப்படன் எஸ்.எப்.மெக்கென்சி கூறியுள்ளார்1.

இதே போன்றதொரு நிகழ்வை அயோத்தியதாசரும் பார்ப்பார் என்போருக்கும் பறையர் என்போருக்கும் பூர்வீக விரோதம் இருந்ததைப் பதிவுசெய்கிறார். ‘ஆரிங்டன் துரையவர்கள் தனது பட்ளர் கந்தசாமி என்பவரையும் மற்றொரு துரை தனது பட்ளர் கிருஷ்ணப்பன் என்பவரையும் தருவித்து இதோ எங்களுக்குத் தமிழ் பாடம் கற்பித்து வரும் பார்ப்பார்கள் உங்களைத் தாழ்ந்த சாதிகளென்றும் பறையர்கள் என்றும் நீச்சர்கள் என்றும் கூறுகிறார்களே அது வாஸ்தவந்தனோ என்றார்கள்.* கந்தசுவாமி என்பவர் தனது துரையை நோக்கி ஐயா எங்கள் குலத்தோருக்கும் இவர்கள் குலத்தோருக்கும் ஏதோ பூர்வவிரோதம் இருக்கின்றது. அதினால் எங்களை இவர்கள் இழிவுகூறி துறத்துவது வழக்கம். எங்கள் குலத்தோர் வாசஞ்செய்யும் வீதிக்குள் இவர்கள் வந்துவிடுவார்களானால் இவர்களை இழிவு கூறி உங்கள் பாதம் பட்டவிடம் பாழாகிவிடுமே என்று சொல்லிக்கொண்டு இவர்களைத் துறத்தி வந்தவழியிலுஞ் சென்ற வழியிலும் சாணத்தைக் கரைத்து தெளித்து இவர்கள் ஓடியவழில் சாணச்சட்டியை உடைத்து வருகின்றார்கள். இத்தகையச் செயல் பெரும்பாலும் எங்கள் கிராமங்களுக்குள் வழங்கிவருகின்றது பூர்வவிரோதமும் அதன் காரணங்களும் எங்களுக்குச் சரிவர விளங்கவில்லை’ என்கிறார்2. இதோடு தொடர்புடைய ‘பாம்ப நம்புனாலும் நம்பு பாப்பான நம்பாதே’ என்ற தலித்திய வழக்காறும் பொருந்திப்போகிறது. அதனால் இக்கருத்துகளையும் ‘தீண்டாச் சேரி’யோடு கணக்கில் கொள்ளவேண்டும்.

இன்றையச் சூழலில் தீண்டத்தகாதவர்களாக தலித்துகள் குறிக்கப்பட்டாலும் தீண்டாமை பின்பற்றப்பட்ட காலங்களில் பார்ப்பனர்கள், பார்ப்பனர் அல்லாதாரையும் பார்ப்பனருக்குள் ஒருசில பிரிவையும் தீண்டாராகவே ஒதுக்கிவந்தனர். இதுபோலவே வணிகர், வேளாளர், சூத்திரர் என்ற படிநிலை சாதியைச் சேர்ந்தவர்களும் தீண்டாமையைப் பின்பற்றி வந்தனர். காப்படன் எஸ்.எப்.மெக்கென்சி, பட்லர் கந்தசாமி ஆகியோர்களின் கூற்றுகளின்படி தலித்துகளும் பார்ப்பனர்களைத் தீட்டுக்குரியவர்களாகக் கருதியுள்ளது தெரிகின்றது. அதனால் ‘தீண்டா’ என்றச் சொல் கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்குமா? ‘தீண்டாச்சேரி’ என்ற சொல் இடம்பெபெறும் இராஜராஜன் கல்வெட்டுக்குறித்து கல்வெட்டறிஞர் நொபொரு கராஷிமா ‘சோழப் பேரரசின் இதயப் பகுதியான சோழ மண்டலத்தின் 40 கிராமங்களிலிருந்து வரும் வருமானத்தை முதலாம் ராஜராஜன் நல்கியதை விவரித்துக் கோவில் கற்சுவரின் மீது பொறிக்கப்பட்டவை. அந்தக் கிராமங்களில் இறையிலி நிலங்களின் பரப்பு, இருப்புப் பற்றிய விரிவான விவரணையில், பிற வைகையான குடியிருப்புப் பகுதிகளுடன் சேர்த்து தீண்டாச் சேரி பற்றிய குறிப்பையும் நாம் காண்கிறோம். தமிழில் ’சேரி’ என்ற சொல் தெரு அல்லது குடியிருப்புப் பகுதி என்று பொருள்படுகிறது.

*அதனுடன் சேர்ந்து வந்துள்ள ' தீண்டா' என்பதற்குத் தொடக்கூடாத என்று பொருள்3. என்று கூறுகின்றார். மேலும் அவர் 'தமிழ்க் கல்வெட்டுகளில் தீண்டாதார் அல்லது தீண்டாமை பற்றிய வெகுசில நேரடியான குறிபுகளில் ஒன்று, முதலாம் ராஜராஜனின் கல்வெட்டுகளில் தீண்டாச் சேரி என்ற சொல் பயன்பாடும் ஆகும். இது தீண்டாதார்கள் என்று கருதப்படுகின்ற குறிப்பிட்ட சில குழுமங்கள் பற்றிய குறிப்புகளிலிருந்து வேறுபட்டு உள்ளது.*

*இந்தக் கல்வெட்டுகள் பறைச் சேரி என்ற மற்றொரு குடியிருப்புப் பகுதியையும் குறிப்பிடுகின்றன. உறுதியாக, தமிழ்நாட்டில் தீண்டாச்சாதி என்று மிக நன்கு அறியப்பட்ட பறையர்களின் குடியிருப்புப் பகுதி என்பதே இதற்கு அர்த்தம். இந்த நீண்ட கல்வெட்டுகளில் ஆரம்பத்தில் உள்ள மெய்கீர்த்தியைத் தொடர்ந்து, வழங்கப்பட்ட ஒவ்வொரு கிராமத்திற்கான அரசக் கட்டளை உள்ளது. அதில் வழங்கப்பட்ட 40 கிராமங்களின் நல்கை குறித்த விவரிப்பும்,கிராமத்தின் மொத்த பரப்பு, குடியிருப்புப் பகுதியும் கோயில் குளங்களும் இடுகாடும் இன்னும் அதைப் போன்ற இறையிலி நிலத்தைக் கழித்து மீதமிருக்கும் பரப்பு ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த அரசாணை பொறித்துள்ள கல் உடைந்துள்ளதால், அவற்றில் குறிப்பிடப்பட்ட 40 கிராமங்களில், 33 கிராமங்கள் பற்றிய விவரங்களை மட்டுமே துல்லியமான அளவில் நம்மால் அறிந்து கொள்ள முடிகிறது. அந்த 33 கிராமங்களில் 20 கிராமங்களில் பறைச்சேரி பற்றிய குறிப்பு வருகின்றது. ஆகவே இதற்குப் பொருள், எல்லாக் கிராமங்களும் தம் எல்லைக்குள் பறைச் சேரியைப் பெற்றிருக்கவில்லை என்பதாகும். ஆயினும் அரச ஆணையில் பறைச் சேரி பற்றி வரும் குறிப்பானது, சோழ மண்டலத்தில் தானமாக அளிக்கப்பட்ட கிராமங்களில், பாதிக்கும் மேற்பட்டவற்றில் பறைச்சேரி இருப்பை மிக நன்கு எடுத்துக்காட்டுகிறது எனலாம். இதற்கு மாறாக, அந்த அரசாணையில் தீண்டாச்சேரி பற்றி குறிப்பு இல்லை4. என்றும் கூறுகிறார். இதன் ஊடாக 'தீண்டாச் சேரி' என்ற சொல் பறையரைக் குறிக்கவில்லை எனலாம். இதை மேலும் உறுதிபடுத்தும் விதமாக அக்கல்வெட்டின் மெய்க்கீர்த்தி...ஸ்ரீராஜராஜதேவர் குடுத்த ஊர்களின் ஊர்நத்தமும் ஸ்ரீகோயில்களுங் குளங்களும் ஊடறுத்துப்போன வாய்க்கால்களும்* **பறைச்சேரியும்** *கம்மாளச்சேரியும் உள்ளிட்டு நிலங்களும் என்று வருவதாலும் உணரலாம். பறையர்களைத் தீண்டாதாராகக் கருதியிருந்தால், புகழ் பெற்ற கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்ட 40 ஊர்களைக் குறிப்பிடும் மெய்க்கீர்த்தியின் தொடக்கத்தில் பறைச்சேரியைக் குறிப்பிட்டிருப்பார்களா?*

*இந்த நாற்பது கிராமங்களின் இறையிலி ஆணையை தென்னிந்திய கல்வெட்டுத் தொகுதி இரண்டில் (பகுதி ஒன்று மற்றும் இரண்டு) இரண்டு பகுதிகளாகப் பதிவு செய்துள்ளனர். முதல் பதிவில் 17 ஊர்கள் பற்றிய பதிவும்(எண் கொடுக்கப்பட்டுள்ளது) இரண்டாம் பதிவில் 24 ஊர்கள் பற்றிய பதிவும் இடம்பெற்றுள்ளன. இவற்றில் ஒன்று ஐந்து ஊர்களில் கொடுக்கப்பட்ட தானத்தைத் தொகுத்துக் கூறுவதாக உள்ளது. இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் 40 கிராமங்களில் பறையர்கள் 20 கிராமங்களில் இருந்தார்கள் என்று குறிப்பிடும் கல்வெட்டறிஞர் நொபொரு கராஷிமா, அந்த 40 கிராமங்களில் யார்? யார்? இருந்தார்கள் என்று குறிப்பிடவில்லை. இறையிலி பகுதியாக அறிவிக்கப்பட்ட இக்கல்வெட்டில் பறைச்சேரி 23 இடங்களிலும் கம்மாணசெரி 8 இடங்களிலும் ஈழச்செரி 8 இடங்களிலும் தளிச்சேரி, வண்ணாரச்சேரி, தலைவாய்ச்சேரி தலா ஒரு இடங்களிலும் குறிப்பிடப்படுகின்றன. ('பறைச்சேரி' என்ற சொல் இக்கல்வெட்டுக்கு முன்பாகவே அதாவது கி.பி 960 இல்(விளங்குடி நிலத்தில் பறைச் சேரிபத்து தெ.க.தொகு 3,-202,தெ.க.தொ.க 5-718) தனித்த குடியிருப்புப் பகுதியாகக் குறிப்பிடப்படுகிறது. கம்மாண்சேரி என்ற சொல் கி.பி 1008 இல் இக்கல்வெட்டிற்கு முன்பாகவே இடம்பெறுகிறது.( பறைச்சேரியுங் கம்மாண்சேரியுங் சுடுகாடும் பெறுவதாகவும்-El.xxii.34) வண்ணாரச்சேரி என்ற சொல்கி.பி 892 ஆம் ஆண்டும் (வண்ணாரச் சேரி நாங்கள் மயக்கிக் குடுத்த நிலத்து தெ.க.தொகு 6-535) ஈழச்சேரி, தளிச்சேரி ஆகியன இக்கல்வெட்டில்தான் முதன் முதலாகவும் இடம்பெறுகின்றன.*

*ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் ஒரு பகுதியில் வாழும் பகுதி சேரி எனப்படும். இதனால் சேரி என்ற தனிப்பட்ட பகுதியில் குழுவாக வாழ்ந்தவர்கள் பறையர்கள் மட்டும் அல்லர். சேரி என்ற பகுதிக்குள் வாழாத பெரும்பான்மையற்ற மற்ற சமூகத்தார் ஊர்நத்தம் என்ற பகுதியில் வாழ்ந்துள்ளனர். இங்கு சேரி என்ற பகுதியில் வாழும் மக்கள் தீண்டாமையால் பிரிந்து வாழவில்லை'பறைச்சேரியுங் கம்மாண்சேரியுங் சுடுகாடும் பெறுவதாக' என்பதை நோக்க தங்களுக்கான தனித்த குடியிருப்புப் பகுதியை அரசன் மகிழ்ந்து அல்லது விரும்பி*

கொடுத்ததாகவே உள்ளது. இதை வேளாளர்கள் தங்களுக்கான சுடுகாட்டைத் தனியாகப் பெற்றதாலும் அறியலாம். இக்கல்வெட்டுக்கு முன்பாக பறையர்களுக்கோ,வேளாளர்களுக்கோ தனித்த சுடுகாடு இருக்கவில்லை. அதற்கான பதிவுகள் இல்லை. இதனால் சேரிகளும் சுடுகாடும் தங்களுக்கான தனித்த ஊரிமையாகக் கேட்டுப் பெற்றிருக்கிறார்கள். பறையர்களுக்கும் வேளாளர்களுக்கும் முன்பாகவே வண்ணார்களுக்கு அரசர்களாக விரும்பி தாங்களாகவே தனித்த குடியிருப்புகளைக் கொடுத்துள்ளார்கள். அதன் பிறகே மற்றவர்கள் பெற்றிருக்கிறார்கள். இதை மேற்காணும் சமூகத்தார்க்குப்பின் கி.பி1190 இல் அகரப்ஹ்மதேயம் அதாவது பிராமணர்கள் குடியிருப்பதற்காக விடப்பட்ட ஊர் பற்றிய (தெ.க.தொ. 14-243)) குறிப்பு கிடைக்கிறது (இதற்கு முன்பாகவே 1028 குறிப்புக் கிடைக்கிறது. தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதியைக் காலமுறையில் தொகுத்த எ.சுப்பராயலு கணக்கில் கொள்ளவில்லை போலும்). தனித்த குடியிருப்புகள் தீண்டாமைக்குரியதாகக் கருதப்பட்டிருந்தால் பிராமணர்கள் தங்களுக்கென்று தனித்த குடியிருப்பைப் பெற்றிருப்பார்களா?

பிராமணர்கள் தங்களுக்கான குடியிருப்பைப் பெற்றப் பின்னர் மற்றவர்கள் தனித்து வாழும் பகுதியைத் தீண்டாமைக்குரியதாக மாற்றிவிட்டனர். இதைப் பரத்தையர்களிடம் இருந்த பரதத்தைத் தாங்கள் கற்றுக்கொண்டு அவர்களைச் சமூகத்தில் இழிவானவர்களாக மாற்றியதாலும் பாணர்களிடமிருந்து பாடும் மரபைக் கற்றுக்கொண்டு பாணர்களை கீழானவர்களா மாற்றியதாலும் தோல்கருவிகளை இசைக்கக் கற்றுக்கொண்டு பறையர்,துடியர்களை தீண்டத்தகாதவர்களாக மாற்றியதாலும் புரிந்துகொள்ளலாம். அதாவது பார்ப்பனர் மக்களால் உயர்வானதாகக் கருதப்படும் கலைகளையும் இருப்பிடங்களையும் தங்கள் வசப்படுத்திக்கொண்டு அதைத் தங்களுக்கு முன்பாகப் பின்பற்றியவர்களை இழிவுபடுத்தி மக்களால் புறக்கணிக்கச் செய்தனர். இக்கல்வெட்டில் வேளாளர்கள் தனித்து வாழ்ந்த சேரிப்பகுதியாகக் குறிக்கப்படவில்லை. ஆனால் வேளாளர்கள் மட்டும் பயன்படுத்தும் சுடுகாட்டை இறையிலி நிலமாகப் பெற்றிருக்கின்றனர். ஆறு இடங்களில் வேளாளர் சுடுகாடு சுட்டப்படுகின்றன. தனித்த சுடுகாட்டைப் பெற்றிருப்பதால் இவர்கள் தீண்டார் என்ற நிலையில் இருந்தார்கள் என்று கூறமுடியாது. இதே நிலையில் பறையர்களும் தங்களுக்கான தனியான சுடுகாட்டை ஒன்பது ஊர்களில் பெற்றிருக்கின்றனர். மற்ற பறைச்சேரி உள்ள ஊர்களில் பறையர்களுக்கென்று தனியான சுடுகாடு இல்லை. மேலும் கம்மாளர், ஈழவர், தளிச்சேரியில் வாழ்ந்தவர், வண்ணார் போன்றோர்களுக்கும் தனித் சுடுகாடு இல்லை. இதனால் தனித்த சுடுகாடு என்பது அப்பகுதியில் வாழ்ந்த பெரும்பான்மை சமூகத்தில் இருப்பையும் மதிப்பையும் காட்டுகின்றன எனலாம். தனித்த சுடுகாடு இல்லாத ஊர்களில் எல்லோருக்கும் ஒரே சுடுகாடு இருந்திருக்கவேண்டும் என்று கூறுவதில் தவறிருக்காது. இதனால் 'தீண்டாச் சேரி' என்பது தீண்டத்தகாதவர்கள் வாழும் பகுதி என்ற இன்றைய பொதுமன புத்தியோடு பொருந்திப்போகவில்லை.

மேலும் சோழ நாட்டின் வளமான ஆட்சி நடைபெற்ற இக்காலத்தில் இறையிலி நிலமாகக் கொடுக்கப்படும் இப்பகுதியில் மேற்காணும் சமூகத்தினர் அல்லாத வேறு சமூகத்தினர் பற்றிய எக்குறிப்பும் இக்கல்வெட்டில் இடம்பெறவில்லை. தமிழக வரலாற்றில் செழிப்பாகவும் உயர்வாகவுத் தங்களுக்கென்று தனித்த பகுதிகளில் வாழ்ந்தவர்கள் என்று கூறப்படுபவர் பார்ப்பனர்கள். இவர்களைப் பற்றிய எக்குறிப்பும் இக்கல்வெட்டில் இடம்பெறவில்லை. 'அகரம்' என்ற பிராமணர் ஊர் கி.பி.1260 இல் கல்வெட்டுகளில் இடம்பெறுகிறது. அதனால் தஞ்சைபெரியகோயிலுக்கு 40 ஊர்களின் வருவாயை தானமாகக் கொடுக்கும் இராஜராஜன் கல்வெட்டில் (கி.பி.1014) பிராமணர் சேர்ந்துவாழும் அகரம் பற்றிய குறிப்பு இல்லாதது பிராமணர் புறக்கணிக்கப்பட்டதை வெளிப்படுத்துவதாக உள்ளது. இப்புறக்கணிப்பை ஆதித்திய கரிகாலன் கொலைசெய்யப்பட்டதோடு பொருத்திப் பார்க்கலாம்.(கரிகாலன் நான்கு பிராமணரால் கொல்லப்பட்டான் என்றும் அவர்கள் முதலாம் ராஜராசனால் நாடுகடத்தப்படனர் என்றும் கல்வெட்டுகளில் பதிவு உள்ளது)

ஆனால் விதி விலக்காக பிராமணரான 'சேனாதிபதி கிருஷ்ணன் இராமனான மும்முடி சோழ பிரம்மராயன் படைத்தலைவர்களுள் ஒருவனாக இராஜராஜ சோழன் ஆட்சியின் பிற்பகுதியில் இருந்துள்ளான். இவன் ஆணைப்படி தஞ்சைப் பெரிய கோயில் திருச்சுற்று மாளிகை

*கட்டப்பட்டுள்ளது. இதற்கான கல்வெட்டொன்று சுற்றுச்சுவரில் உள்ளது. இராஜராஜ சோழனின் படைத்தலைவர், வளநாட்டு அதிகாரி, கூற்றத் தலைவர்கள் பலருள்ளும் இவர் ஒருவர் மட்டும் இடம்பெறுவது பிராமணரின் அக்கால நிலையை உணர்த்துவதாக உள்ளது. அதனால் பிராமணரின் ஆதிக்கம் அற்ற அக்காலத்தில் 'தீண்டாச்சேரி' என்பது சாதியாகப் பிரிந்து வாழ்ந்த மக்களில் ஒரு சாரரை இழிபடுத்தும் நோக்கில் ஆளப்பட்டிருக்காது எனலாம். இதைச் சங்கால தமிழ்ச் சொல்லான 'நாற்றம்' என்பதோடு பொருத்திப் பார்க்கலாம். அதாவது உயர்பொருட்பேராக இருந்த சொல் இழிபொருட் பேராக மாற்றப்பட்டிருக்கிறது. இங்கே சொல் மாறவில்லை. சொல்லைப் பொருள் கொள்ளும் மக்களின் மனமே மாறியிருக்கிறது. இது 'தீண்டாச்சேரி' என்ற சொல்லுக்கும் பொருந்தும். இக்கல்வெட்டுக்குறித்து விவரிக்கும் நொபொரு கராஷிமா 'தீண்டாச் சேரிக்கும் பறைச் சேரிக்கும் உள்ள உறவு தெறிவற்று உள்ளது. தீண்டாச்சேரியும் பறைச் சேரியும் ஒன்றாகவும் ஒரே கிராமத்தில் குறிப்பிடப்படவில்லையானால், இவை இரண்டும் சாரத்தில் ஒன்றானவையே. பெயரில் மட்டும் வேறுபாடு உடையவை என்று கருதலாம். ஆனால், உண்மையில் இரண்டு கிராமங்களில் மட்டும் பறைச் சேரியுடன் தீண்டாச்சேரியும் இருந்துள்ளது. இது இவை இரண்டும் அடிப்படையில் வேறானவை என உணர்த்துகிறது. ஆயினும் தீண்டாச் சேரியில் வாழ்ந்த சமூகத்தினர் யார் என நமக்குத் தெரியவில்லை5'என்கிறார். இதில் பறைச் சேரியில் உள்ளவர்களைத் தீண்டாச் சேரியில் வாழ்ந்தவர்கள் என்று சுட்ட முடியாமல் போனதற்கு வருந்துவதைப் பார்க்கமுடிகிறது.*

*கல்வெட்டில் .'இந்நாட்டு (அருமொழிதேவவளநாட்டு) நகரம் திருத்தெங்கூர் நிலம் அளந்தபடி(அளவு குறிப்பிடப்பட்டுள்ளது) இவ்வூர் ஊர்நத்தமுங்குளங்களும் புலத்தில் குளங்களும்* **தீண்டாச்செரியும் பறைச்செரியுஞ்** *சுடுகாடும்6' என்ற பகுதியில் வருகின்றது. இராஜராஜ சோழன் தஞ்சை பெரியகோவிலுக்கு நாற்பது ஊர்களைத் தானமாகக் கொடுத்த கல்வெட்டில் தீண்டாச்சேரி தனியாகவும் பறைச்சேரி தனியாகவும் இடம்பெறுவதைப் பார்க்க முடிகிறது. அதனால் பறைச்சேரி அக்காலத்தில் தீண்டாச் சேரியாக இருக்கவில்லை என்பது தெளிவு.*

**அடிக்குறிப்புகள்**

*1.தென்னிந்திய குலங்களும் குடிகளும்-எட்கர் தர்ஸ்டன். தொகுதி ஆறு – பக்கம் 93. பதிப்பகம்.தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாபூர். முதற்பதிப்பு 2003.*

*2.அயோத்திதாசர் சிந்தனைகள்- தொகுப்பாசிரியர் ஞான.அலாய்சியஸ். பக்கம்139. பதிப்பகம்.நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், தூய சவேரியார்(தன்னாட்சி) கல்லூரி பாளையங்கோட்டை -627 002. இரண்டாம் பதிப்பு 2011.*

*3.தமிழகத்தில் சாதி உருவாக்கமும் சமூக மாற்றமும். நொபொரு கராஷிமா, எ.சுப்பராயலு(பொ.ஆ 800 - 1500)- பக்கம் 1. பதிப்பகம். நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்., 41 –பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர். சென்னை-600 098. முதற்பதிப்பு,2017.*

*4. மேலது பக்கம் 2.*

*5. மேலது பக்கங்கள்2, 3.*

*6. தென்னிந்திய கல்வெட்டுத் தொகு 2.பகுதி 1மற்றும் 2 - பக்கம் 45*

****** ********** ********** **********